DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| C.C.NO. 46 / 2018 | | Crime No.: | Station : |
| PW : 8 | LW : 4 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | மதி | Caste | |
| Father's Name | தங்கராஜ் | Calling | ஐ.டி. கம்பெனி |
| Village | புளியம்பட்டி | Religion | |
| Taluk | சத்தியமங்கலம் | Age | 29 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 14.10.2024 |

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது புளியம்பட்டில் வசித்துக்கொண்டு ஐ.டி. கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன தங்கராஜ் எனது தந்தை. கடந்த 04.09.2017-ம் தேதியன்று புளியம்பட்டியிலிருந்து நல்லூர் செல்லும் வழியிலுள்ள S.R.C School-க்கு எதிர்புறமாக என் அப்பா நின்றுகொண்டிருந்தபோது கார் ஒன்று வந்து அடித்துவிட்டதாக என் அம்மா எனக்குத் தகவல் சொன்னார்கள். அப்போது நான் வீட்டிலிருந்தேன். என் அப்பாவை நான் புளியம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்று என் அப்பாவைப் பார்த்தேன். பின் அங்கிருந்து சத்தி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தோம். மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு என் அப்பா இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் சொல்லியதுபோல்தான் போலீசார் என்னை விசாரிக்கும்போதும் கூறினனா என்றால் ஆமாம்.

மறுவிசாரணை

இல்லை. சாட்சி முடித்துவைக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| C.C.NO. 46 / 2018 | | Crime No.: | Station : |
|---|---|---|---|
| PW : 9 | LW : 13 | C.MP. | DVC : |

| Name | சபரி | Caste | |
|---|---|---|---|
| Father's Name | தங்கவேலு | Calling | வியாபாரம் |
| Village | புளியம்பட்டி | Religion | |
| Taluk | சத்தியமங்கலம் | Age | 39 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 14.10.2024 |

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது புளியம்பட்டில் வசித்துக்கொண்டு வியாபாரம் செய்து வருகிறேன். விபத்து நடந்ததை நான் நேரில் பார்க்கவில்லை. 2018 – 2019–ம் வருடத்தில் நான் எனது கடையிலிருந்தபோது போலீசார் வந்து என்னிடம் ஒரு விபத்து ஏற்பட்டிருந்ததாகவும் அதற்கு சாட்சிக்காக கையெழுத்து வேண்டும் என்று கேட்டதால் நான் செய்து கொடுத்தேன். பேப்பரில் எழுதி எனது கடையில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிப்படும் பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **அந்தக் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 05.09.2017–ம் தேதி காலை 07.15 மணிக்கு புளியம்பட்டி போலீசார் வந்து விபத்து நடந்த இடத்தைப் பார்த்து என் முன்னிலையிலும், சாட்சி சுரேஷ் முன்னிலையிலும் படம் வரைந்து என் எழுதிக்கொண்டார்கள் என்றும், அதே தேதியன்று 07.45 மணிக்கு என் முன்னிலையிலும், சாட்சி சுரேஷ் முன்னிலையிலும் சம்பவம் இடத்திலிருந்து TN 36 AB 6363 என்ற காரில் உடைந்த நிலையிலிருந்த Head light ஒன்றையும், உடைந்த கண்ணாடி மற்றும் உடைந்த நெம்பர் பிளேட்டையும் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார்கள் என்றாலும், அதில் நான் சாட்சியாக இருந்து கையொப்பம்

செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். எனது கடை எங்குள்ளது என்றால் அருணாச்சலம் மருத்துவமனைக்கு அருகிலுள்ள மனோ ஹோட்டலில்தான் நான் கேசியராக வேலை செய்து வந்தேன். அடிக்கடி காவல் துறையைச் சேர்ந்த நபர்கள் எங்களது ஹோட்டலுக்கு வருவார்கள் என்றால் சரிதான். அதுபோல் எங்களது ஹோட்டலில் ஆர்டர் கொடுக்க வரும்போதுதான் போலீசார் மேற்படி கையெழுத்தை வாங்கினார்களா என்றால் ஆமாம். என்னுடன் யாரெல்லாம் கையெழுத்து செய்தார்கள் என்றால் சுரேஷ் என்னுடன் இருந்தார். அவர் கையெழுத்து செய்தாரா என்று நான் பார்க்கவில்லை. சுரேஷ் அப்பா பெயர், ஊர்ப்பெயர் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்தேனா என்றால் ஆமாம். எந்த வழக்கிற்கு கையெழுத்து செய்தேன் என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

மறுவிசாரணை

இல்லை. சாட்சி முடித்துவைக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| C.C.NO. 46 / 2018 | | Crime No.: | Station : |
|---|---|---|---|
| PW : 10 | LW : 19 | C.MP. | DVC : |

| Name | சுகுமாரன் | Caste | |
|---|---|---|---|
| Father's Name | ராஜு | Calling | உதவி ஆய்வாளர் |
| Village | திங்களூர் | Religion | |
| Taluk | | Age | 59 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 14.10.2024 |

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது திங்களூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.09.2017-ம் தேதியன்று 23.50 மணிக்கு நான் புளியம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலையப் பொறுப்பிலிருந்தபோது கோபி தர்சன் மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற மாரன்ன கவுண்டர் மகன் வாசுதேவன் என்பவரது தகவல் குறிப்பினைப் பெற்று தர்சன் மருத்துவமனையில் உள்நோயாளியாகி இருந்த வாசுதேவன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து 05.09.2017-ம் தேதி புளியம்பட்டி காவல் நிலையக் குற்ற எண்.259/2017 இ.த.ச பிரிவுகள் 279, 337, 304-A-ன் கீழ் வழக்குப் பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையுடன் புகார் வாக்குமூலத்தின் அசலை இணைத்து சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், பிற நகல்களை உயரதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் என்பவரின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. மருத்துவமனை தகவல் குறிப்புடன் முதல் தகவல் அறிக்கையும், புகாரின் வாக்குமூலத்தையும் இணைத்து நீதிமன்றத்திற்கும், புலன் விசாரணை அதிகாரிக்கும்

கோப்புகளை அனுப்பி வைத்து ஒப்படைத்தேனா என்றால் நீதிமன்றத்திற்கு தகவல் குறிப்பை அனுப்பவில்லை, ஆனால் புலன் விசாரணை அதிகரியிடம் மருத்துவத் தகவலை ஒப்படைத்தேன். மேற்படி தகவலை எப்போது புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தேன் என்று சி.டி. பைலில் குறிப்புகள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

2. நான் சொல்வதுபோல் இன்டிமேசன் பெற்று வாக்குமூலம் பதிவு செய்து பின்பு முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்யப்பட்டிருந்தால் இன்டிமேசனையும் நீதிமன்றத்திற்கு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்க வேண்டுமென்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தின் இறுதிப் பக்கத்தில் "இன்று 05.09.2017–ம் தேதி காலை 06.30 மணிக்கு வாக்குமூலமான புகாரில் பேரில்" என்று என்னால் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் யாரால் எழுதப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை, அது என்னுடைய கையெழுத்து இல்லை.

3. மேற்படி வாக்குமூலம் கோபி தட்சின் மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்டது என்பதற்கான மருத்துவர் அல்லது செவிலியர் ஆகியோர்களின் கையெழுத்து ஏதேனும் பெறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்ற குறிப்பு புகார் வாக்குமூலத்தில் இடம்பெற்றுள்ளதா என்றால் இல்லை, நான் ஒருவரை அனுப்பி வைத்து புகார் வாக்குமூலத்தை அவர் பெற்று வந்து காவல் நிலையம் வந்து என்னிடம் ஒப்படைத்தார். அன்றைய தினம் நான் புகார்தாரான வாசுதேவனை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

4. மேற்படி வாக்குமூலத்தில் வாசுதேவன்தான் கையெழுத்து செய்தார் என்று எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். புகார் வாக்குமூலமானது சம்பவம் நடநததாக சொல்லும் நேரத்திலிருந்து 11 மணி நேரம் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், இரவு நேரம் என்பதால் காலதாமதம். மேற்படி விபரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை 2 நாள் காலதாமதமாகத்தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. புகார் வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் அனைத்தும் புகார்தாரரால் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்திலுள்ள வாகனத்தின் எண் குறித்து புகார்தாராரால் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. யாருடைய

அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று புகார்தாரரால் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க புகார் வாக்குமூலத்தின் பின் பகுதியில் நான் கையெழுத்து மட்டுமே செய்துவிட்டு தயார் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையில் நான் கையெழுத்து மட்டுமே செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டதுபோல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை. சாட்சி முடித்துவைக்கப்பட்டது.